# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.142/2022 | Date | : 10.07.2023 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : சங்ககிரி |
| Name | : சேகர் | Calling | : போலீஸ் |
| Father / Husband Name | : பச்சமுத்து | Religion | : இந்தியன் |
| Village | : கன்னந்தேரி | Age | : 46 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.07.2023.
(1முதல்5 வரையிலான எதிரிகள் ஆஜர் . எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜரில்லை)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1. நான் தற்போது சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியுரிந்துவருகிறேன். கடந்த 03.07.2018ம் தேதி நான் சங்ககிரி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது இரவு அலுவலாக நியமிக்கப்பட்டு என்னுடன் Friends of Police சுரேஷ் என்பவரை அழைத்துகொண்டு இரவு சுமார் 11.45 மணிக்கு பயணியர் மாளிகை அருகே ரோந்து செல்லும்போது ஐந்து நபர்கள் ஒன்றுகூடி பீர் குடித்துகொண்டிருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது ஒருவர் மீது ஒருவர் கல்லை வீசிகொண்டும், ஒருவர் கையில் கத்தியை வைத்துகொண்டு கூச்சலிட்டு வந்தனர். நான் சென்று அவர்களை எச்சரித்தபோது அதை கேளாமல் என்னை பார்த்து இங்கிருந்து சென்றுவிடுங்கள் எங்கள் பக்கத்தில் வந்தால் என் கையால்தான் சாவு என்று எச்சரித்து சென்றுவிட்டனர்.

2. என்னை பார்த்து தாயோழி என்று கூறி எச்சரித்து சென்றனர். பின்னர் விசாரித்ததில் மேட்டுதெருவை சேர்ந்த குப்புசாமி மகன் மகேஷ்வரன் என்பவர் கையில் கத்தியை வைத்து மிரட்டினார் என்பதும், மற்றவர்கள் சிலோன்

காலனியை சேர்ந்த சக்திவேல் என்றும் கட்டம்பாரை சேர்ந்த மணியின் மகன் சக்திவேல் என்றும், திருச்செங்கோடு ஆண்டிபாளையம் வெற்றி நகரை சேர்ந்த இளங்கோ மகன் லோகேஷ்வரன் என்றும், டி.பி ரோட்டை சேர்ந்த பரமேஷ்வரன் மகன் ஸ்ரீநாத் என்றும் தெரியவந்தது. தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் ஐந்து நபர்கள் தான் சம்பவதினத்தன்று தகராறு செய்த நபர்கள் ஆவார்கள். 1வது எதிரி மகேஷ்வரன் தான் கத்தியை கையில் வைத்திருந்த நபர் ஆவார். எதிரி மகேஷ்வரன் வைத்திருந்த கத்தியை பார்த்தால் தற்போது என்னால் அடையாளம் காட்ட இயலும். தற்போது என்னிடம் காட்டப்படும் கத்தி தான் எதிரி மகேஷ்வரன் கையில் இருந்த கத்தி ஆகும். ( **சூரி கத்தி அ.சா.பொ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**).

3. மேற்படி நபர்களின் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க சங்ககிரி உதவி ஆய்வாளரிடம் எழுத்துமூலமான புகார் ஒன்றை அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் அ.சா.ஆ.1 ஆககுறியீடுசெய்யப்படுகிறது**). சங்ககிரி ஆய்வாளர் அவர்கள் 04.07.2018 ம் தேதி இது சம்மந்தமாக என்னிடம் விசாரணை நடத்தினார்.

**குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2023.07.10 12:59:14 +0530

Sd /- Sekar

Judicial Magistrate No.1,
Sankari.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.142/2022 | Date | : 10.07.2023 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : சங்ககிரி |
| Name | : சுரேஷ் | Calling | : படிப்பு |
| Father / Husband Name | : ராமசாமி | Religion | : இந்து |
| Village | : சின்னாகவுண்டனூர் | Age | : 25 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.07.2023.

(1 முதல் 5 வரையிலான எதிரிகள் ஆஜர் . எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜரில்லை)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1. நான் தற்போது சங்ககிரி, பொந்துகிணறு என்ற இடத்தில் குடியிருந்து போட்டி தேர்விற்காக தயார் செய்துகொண்டிருகிறேன். கடந்த 2018 ம் வருடம் நான் சங்ககிரி காவல்நிலையத்தில் Friends of Police ஆக காவல்நிலையத்தில் காவலர்களுக்கு உதவிசெய்துகொண்டிருந்தேன். கடந்த 03.07.2018 ம் தேதி நானும், த.கா. சேகர் எ ன்பவரும் இரவு ரோந்து சென்றுகொண்டிருந்தோம். இரவு 11.00 மணியளவில் பயணியர் விடுதியின் அருகில் சிலர் சண்டைபோட்டுகொண்டு இருப்பதாக எனக்கு தகவல் வந்தது. நானும், சேகரும் பயணியர் விடுதி அருகே சென்றோம்.

2. நாங்கள் சென்றுபார்த்தபோது ஐந்து நபர்கள் சண்டைபோட்டு கொண்டிருந்தார்கள். அதில் ஒரு நபர் கத்தி வைத்துகொண்டிருந்தார். சேகர் அவர்களை பார்த்து சண்டை போடாதீர்கள் என்று கூறினார். அப்போது எதிரிகள் சேகரை பார்த்து கண்டாரஓழி பையா , அருகே வந்தால் எங்கள் கையால்தான்

உனக்கு சாவு என்று மிரட்டினர். ஐந்து நபர்கள் அங்கு இருந்தார்கள் தற்போது அவர்களை பார்த்தால் அடையாளம் காட்டமுடியாது. அந்த சமயம் இருட்டாக இருந்ததால் நான் சரியாக அவர்களின் முகத்தை பார்க்கவில்லை. இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

S R BABU Digitally signed by S R BABU Date: 2023.07.10 12:59:27 +0530

Sd /- Suresh

Judicial Magistrate No.1,
Sankari.